# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW10

| | | | |
|---|---|---|---|
| Name | : மைதிலி | Caste | : |
| W/o. | : சுப்ரமணியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 21.03.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 & A2 present.

முதல் விசாரணை;

நான் தற்போது வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 2014ம் வருடம் நான் சந்தியூர் அம்மாபாளையம் கிராத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். 22.12.2014ம் தேதி நான் எனது கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தபோது காலை சுமார் 10.00 மணிக்கு அலுவலகத்தில் பக்கத்தில் இருந்த நபர்கள் சந்தியூர் பிரிவில் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடந்துவிட்டதாக சொன்னதன் பேரில்

மேற்படி இடத்திற்கு நானும் கிராம உதவியாளரும் சென்று பார்த்தோம். அப்போது நாமக்கல்லிலிருந்து சேலம் செல்கிற மணல் லோட் டிப்பர் லாரி ஒன்று சென்டர் மீடியன் ஆங்கிலில் மோதி சேலத்திலிருந்து சேந்தமங்கலம் செல்லும் ஜோதி என்ற தனியார் பஸ்சில் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. டிப்பர் லாரிக்கு இரண்டு சக்கரமும் இல்லாத நிலையில் ஒரு ஆண் பிரேதமும் ஒரு பெண் பிரேதமும் டிப்பர் லாரிக்கு அருகில் கிடந்தது. தனியார் பஸ்சிற்கு எதிர்புறம் ஒரு பெண் பிரேதமும் இருந்தது.

இது குறித்து அக்கம்பக்கம் இருந்தவர்களிடம் விசாரித்தேன். அவர்கள் நாமக்கல்லிருந்து சேலம் வந்த டிப்பர் லாரி அதிவேகமாக வந்து சென்டர் மீடியனில் இடித்து ஜோதி என்ற தனியார் பேருந்தின் மீது மோதி இடதுபுறம் வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். இதில் பஸ்சில் வந்த பூர்ணிமா என்ற நபரும் இருசக்கர வாகனத்தில் வந்த ராஜா மற்றும் அவரது மனைவி சரோஜா இருவரும் இறந்துவிட்டதாகவும் பஸ்சில் இருந்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும் தெரிய வந்தது. மேற்படி இடத்தை நான் பார்த்துக்கொண்டிருந்தபோது காலை 11.30 மணி அளவில் ரூரல் டிஎஸ்பி என்னையும் கிராம உதவியாளரையும் வழக்கு சம்மந்தமாக சாட்சிகளாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். எங்கள் முன்னிலையில் காவல் துணை கண்காணிப்பாளர் பார்வை மகசர் தயார் செய்தார். பார்வை மகசரில் நானும் கிராம உதவியாளரும் சாட்சி கையெழுத்து செய்தோம். காவல் துணை கண்காணிப்பாளர் வரைபடமும் தயார் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. 2வது கையெழுத்து கிராம உதவியாளரின்

கையெழுத்தாகும். பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும். 12.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அதில் ஜோதி பேருந்தின் முன்பக்கம் இருந்த உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவும் பேருந்திற்குள் இருந்த கண்ணாடி துகள்களையும் சிறிதளவும் டிப்பர் லாரியின் முன்பக்கம் இருந்த உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவும் லாரிக்குள் இருந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவும் நெடுஞ்சாலை துறைக்கு பாத்தியமான சென்டர் மீடியனில் இருந்த இரும்பு ஆம்கிலையும் இருசக்கர வாகனத்தில் இருந்த நெம்பர் பிளேட் ஆகியவற்றை கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. 2வது கையெழுத்து கிராம உதவியாளரின் கையெழுத்தாகும். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மேற்படி சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சம்பவ இடத்தில் கீழே கிடந்த ஜோதி பஸ்சின் உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவு சா.பொ.4, ஜோதி பஸ்சினுள் உடைந்து கிடந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவு சா.பொ.5, விபத்தை ஏற்படுத்திய டிப்பர் லாரியின் கீழே கிடந்த உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவு சா.பொ.6, டிப்பர் லாரியின் உள்ளே உடைந்து கிடந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவு சா.பொ.7, இருசக்கர வாகனத்தின் TN 30AK 2166 என்று எழுதப்பட்டுள்ள உடைந்த நெம்பர் பிளேட் ஒன்று சா.பொ.8, சென்டர் மீடியனில் டிப்பர் லாரி இடித்து சேதப்படுத்திய இரும்பு ஆங்கில் ஒன்று சா.பொ.9 ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

பின்னிட்டு மறுநாள் காலை 6.00 மணிக்கு ரூரல் டிஎஸ்பி எனக்கு போன் செய்து வழக்கு விசாரணைக்காக சந்தியூர் பிரிவிற்கு வரும்படி சொன்னார். நானும், கிராம உதவியாளரும் மேற்படி இடத்திற்கு சென்றோம். அப்போது சந்தியூர் பிரிவு பஸ்ஸ்டாப்பில் விபத்தை ஏற்படுத்திய கணேசன் என்பவரை காவல் துணை கண்காணிப்பாளர் கைது செய்தார். அவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருக்கும்படி காவல் துணை கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டார். அதன்படி மேற்படி கணேசன் தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி கணேன் சொல்லச்சொல்ல காவல் துணை கண்காணிப்பாளரின் அருகில் இருந்த ஒரு காவலர் எழுதினார். அதில் நானும் கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. 2வது கையெழுத்து கிராம உதவியாளரின் கையெழுத்து. மேற்படி கணேசனை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும், அவர்தான் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். அன்றும் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சந்தியூர் அம்மபாளையம் கிராமத்திற்கு சம்பவத்திற்கு முன்பாக எத்தனை நாட்களுக்கு முன்பாக இருந்து வேலை செய்தேன் என்றால் 1.4.2014 முதல் வேலை செய்தேன். வழக்கு விசயமாக நானும்

கிராம உதவியாளர் தமிழரசியும் எத்தனை முறை மல்லூர் காவல்நிலையத்திற்கு சென்றிருப்போம் என்றால் நாங்கள் எப்போதும் போகவில்லை. என்னிடம் காவல்நிலையத்தில் வைத்துதான், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி தானாக முன்வந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் என் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் அருகில் இருந்த கடையில் வைத்து எழுதப்பட்டது. எந்த கடையில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் எழுதப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அந்த கடை யாருக்கு சொந்தமானது என்றும், கடையில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் தற்போது என்னால் சொல்ல முடியாது.

நான் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து செய்ததால்தான் மேற்படி விவரங்களை என்னால் கூற இயலவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது அலுவலகத்திற்கும் நான் குடியிருந்து வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். எனது அலுவலகத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 மீட்டர் இருக்கும். நான் சம்பவம் நடந்த

இடத்திற்கு சென்றபோது என்ன மணி இருக்கும் என்றால் 10.15 அல்லது 10.30 மணி இருக்கும். அடுத்த நாள் 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பிறகு, இன்றுதான் நான் எதிரியை பார்க்கிறேன் என்றால் சரி. நான் சம்பவம் நடந்த அன்றும் அதற்கு மறுநாளும் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும், வழக்காவணங்களில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.